**sns academy**

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

## துணை வினைகள்
## (இயல் : இரண்டு)

1. வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு,பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படையில் _______ பாகுப்படுத்தலாம்

(அ) சில வகையாக (ஆ) பல வகையாக

(இ) ஒரு வகையாக (ஈ) ஒரு சில வகையாக

2. வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?

(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து

3. வினைச்சொற்கள் அமைப்பின் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன?

(அ) செய வினை, செய்வினை (ஆ) தனி வினை, கூட்டுவினை

(இ) தனிவினை, பிறவினை (ஈ) கூட்டுவினை, பிறவினை

4. படியுங்கள் இச்சொல்லில் வரும் தனி வினையைத் தேர்வு செய்து எழுதுக.

(அ) படியு (ஆ) யுங் (இ) யுங்கள் (ஈ) படி

5. படிக்கிறார்கள் இச்சொல்லில் வரும் ஒட்டுகளை எழுதுக.

(அ) பிடி (ஆ) படி (இ) படிக்கிற (ஈ) க்கிறார்கள்

6.எழுதுங்கள் இதில் வரும் வினையடியைத் தேர்வு செய்க.

(அ) எழு (ஆ) எழுது (இ) துங்கள் (ஈ) எழுது + ங்கள்

7.படியுங்கள் இச்சொல்லில் படி என்பது என்ன?

(அ) வினை (ஆ) பெயர் (இ) சொல் (ஈ) வினையடி

8.வந்தார்கள் இச்சொல்லில் வரும் வினையடி என்பது எவ்வாறு அமைந்துள்ளது?

(அ) பகுபதமாக (ஆ) பகாபதமாக (இ) வினையாக (ஈ) பெயராக

9.பகாப்பதம் என்பது

(அ) ஒரு சொல்லைப் பிரிக்க உதவுவது

(ஆ) ஒரு சொல்லை இணைக்க உதவுவது

(இ) ஒரு சொல்லைப் பிரிக்க முடியாது

(ஈ) ஒரு சொல்லை நான்கு கூறுகளாக பிரிக்க உதவுவது

10. ஒரு சொல்லைப் பிரிக்க முடிந்தால், அச்சொல் எவ்வாறு அழைக்கப்படும்?

(அ) பகாப்பதம் (ஆ) பகுபதம் (இ) சொல்பதம் (ஈ) மொழி பதம்

11.தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

(அ) தனிச்சொல் (ஆ) தனிமொழி (இ) தனிவினை (ஈ) தனிப்பட்டச் சொல்

12.ஆசைப்பட்டேன்,கண்டுபிடித்தார்கள்,தந்தியடித்தேன், முன்னேறினோம் ஆகியவை எவ்வகை வினைச்சொற்கள்?

(அ) முதல் வினை (ஆ) துணை வினை (இ) கூட்டு வினை (ஈ) தனி வினை

13.ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம் ஆகியவற்றின் வினையடி என்பது முறையே எவ்வாறாக அமையும்?

(அ)ஆசைப்பட்டேன், கண்டுபிடி, தந்தியடித்தேன், முன்னேறு

(ஆ)ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி முன்னேறினோம்

(இ) ஆசைப்பட்டு, கண்டுபிடி, தந்தியடி முன்னேறு

(ஈ) ஆசைப்பட்டு, கண்டுபிடி, தந்தியடித்தேன், முன்னேறு

14.பகுபதமாக உள்ள வினையடிகள் எவ்வாறு அழைக்கப்படும்?

(அ) தனி வினை (ஆ) கூட்டு வினை (இ) செய்வினை (ஈ) பிறவினை

15.கூட்டு வினையடிகளைக் கொண்ட சொற்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

(அ) தனி வினை (ஆ) கூட்டு வினை (இ) பிற வினை (ஈ) தன் வினை

16. கூட்டு வினைகள் பொதுவாக எத்தனை வகைப்படும்?

(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து

17.**தெரிந்து கொள்வோம் :**

- பெயர் + வினை = வினை
- வினை + வினை = வினை
- இடை + வினை = வினை

18.தந்தி + அடி = தந்தியடி இதில் வரும் 'தந்தியடி' என்பது எவ்வகை வினை என்பதனைக் கூறுக.

(அ) தனி வினை (ஆ) கூட்டு வினை (இ) தன்வினை (ஈ) பிறவினை

19.சுட்டி + காட்டு = சுட்டிக்காட்டு இதில் வரும் கூட்டுவினை வகையைத் தேர்வு செய்து எழுதுக.

(அ) பெயர் + வினை = வினை (ஆ) வினை + வினை = வினை

(இ) இடை + வினை = வினை (ஈ) சொல் + வினை = சொல்வினை

20. பெயர் + வினை = வினை வரும் கூட்டுவினைச் சொல்லைத் தேர்வு செய்க.

(அ) கேள்விப்படு (ஆ) கண்டுபிடி (இ) சொல்லிக்கொடு (ஈ) வந்துப்போ

21. முன் + ஏறு = முன்னேறு இதில் வரும் இடைச் சொல்லை எழுதுக.

(அ) முன் (ஆ) ஏறு (இ) முன்னே (ஈ) முன் + ஏறு

22. கண்டு + பிடி= கண்டுபிடி இதில் வரும் வினையடியின் வகையைக் கூறுக.

(அ) தனிவினை (ஆ) கூட்டுவினை (இ) தன்வினை (ஈ) பிறவினை

23. ஆணை + இடு = ஆணையிடு இதில் வரும் பெயர்ச்சொல்லைத் தேர்வு செய்து எழுதுக.

(அ) ஆணையிடு (ஆ) ஆணை (இ) யிடு (ஈ) இடு

24. கீழ் + இறங்கு = கீழறங்கு இதில் கீழ் என்பது எவ்வகை சொல் என்பதைக் கூறுக.

(அ) பெயர் (ஆ) வினை (இ) இடை (ஈ) பொது

25. பின்பற்று இச்சொல்லின் கூட்டுவினையின் வகையை எழுதுக.

(அ) பெயர் + வினை = வினை (ஆ) வினை + வினை = வினை

(இ) இடை + வினை = வினை (ஈ) தன் + வினை = வினை

26. நான் படம் பார்த்தேன் இதில் வரும் வினைச் சொல்லை எழுதுக.

(அ) நான் (ஆ) படம் (இ) பார்த்தேன் (ஈ) நானும் படமும்

27. நான் படம் பார்த்தேன், கண்ணன் போவதைப் பார்த்தேன் இத்தொடர்களில் வரும் வினையைத் தேர்வு செய்க.

(அ) போவது (ஆ) படம் (இ) பார் (ஈ) கண்ணன்

28. நான் படம் பார்த்தேன்

கண்ணன் போவதைப் பார்த்தேன் - இத்தொடர்களில் வரும் பார் என்னும் வினை உணர்த்தும் பொருள் என்ன?

(அ) கண்களால் பேசுதல் (ஆ) கண்களால் பார்த்தல்

(இ) கண்களால் சொல்லுதல் (ஈ) கண்களை மூடுதல்

29. கண்களால் பார்த்தல் என்பது பார் என்னும் வினையில் எவ்வகைப் பொருளை உணர்த்துகிறது?

(அ) சிறப்பானப் பொருளை (ஆ) ஆதிப்பொருளை

(இ) அடிப்படைப் பொருளை (ஈ) தனித்துவமானப் பொருளை

30. ஓடப் பார்த்தேன் இதில் முதல் வினை எது?

(அ) பார் (ஆ) ஓட (இ) பார்த்தேன் (ஈ) ஓடுதல்

31.ஓடப் பார்த்தேன் இதில் வரும் கூட்டு வினையைத் தேர்வு செய்க.

(அ) ஓட (ஆ) பார் (இ) பார்த்தேன் (ஈ)ஓடப் பார்

32. எழுதிப்பார்த்தேன் இதில் வரும் முதல் வினை எது?

(அ) எழுதி (ஆ) பார் (இ) பார்த்தேன் (ஈ) எழுதிப்பார்

34. எழுதிப் பார்த்தேன் இச்சொல்லில் எத்தனை உறுப்புகள் உள்ளன?

(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து

35. தன் அடிப்படைப் பொருளை விடுத்து முதல் உறுப்போடு சேர்ந்து வந்து பொருளை தருவது எது?

(அ) பிறவினை (ஆ) தன்வினை (இ) முதல் வினை (ஈ) துணைவினை

36. ஓடப் பார்த்தேன் இதில் பார் என்னும் வினை உணர்த்தும் பொருள் என்ன?

(அ) பார்த்தல் (ஆ) பார்க்கும் (இ) பார்வை (ஈ) முயற்சி

37. ஒரு கூட்டு வினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை தரும் வினை எது?

(அ) முதல் வினை (ஆ) துணைவினை (இ) தன்வினை (ஈ) பிறவினை

38. ஒரு கூட்டு வினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விடுத்து வேறு ஒரு இலக்கணப் பொருளைத் தரும் வினை எவ்வாறு அழைக்கப்படும்?

(அ) முதல் வினை (ஆ) துணைவினை (இ) இரண்டாவது வினை (ஈ) பிறவினை

39. செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும் வினை எது?

(அ) தனிவினை (ஆ) கூட்டுவினை (இ) முதல் வினை (ஈ) துணைவினை

40. துணைவினை என்பது எந்த வடிவில் இருக்கும்?

(அ) எழுத்து வடிவில் (ஆ) சொல் வடிவில்

(இ) வினையடி வடிவில் (ஈ) பெயரடி வடிவில்

41. திணை, பால்,எண், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறுவது எது?

(அ) முதல்வினை (ஆ) துணைவினை (இ) தனிவினை (ஈ) கூட்டுவினை

42. தமிழில் உள்ள துணைவினைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(அ) 30 (ஆ) 40 (இ) 50 (ஈ) 60

43. தமிழிலுள்ள துணைவினைகளில் பெரும்பாலானவை எந்த வினைக்குரியது?

(அ) முதல் (ஆ) இரண்டாம் (இ) துணை (ஈ) தனி

44. **தெரிந்து கொள்வோம் :**

- பார், வை, இரு, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை இருவகை வினைகளாகவும் செயல்படுகின்றன.

45. பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்தும் வினை எது?

(அ) முதல் வினை (ஆ) துணைவினை (இ) தனிவினை (ஈ) கூட்டு வினை

46. முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப் பொருண்மைக்கு மெருகூட்டுவது எவ்வகை வினை?

(அ) தனிவினை (ஆ) கூட்டுவினை (இ) முதல்வினை (ஈ) துணைவினை

47. துணைவினைகள் எந்த மொழியில் ஆதிக்கம் செலுத்துகின்றன?

(அ) பேச்சு மொழி (ஆ) எழுத்து மொழி (இ) வட்டார மொழி (ஈ) தனி மொழி

48. **தெரிந்து கொள்வோம் :**

- தற்கால தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், கொடு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டும், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக உள்ளன.

49. புத்தகம் மேசையில் இருக்கிறது
என்னிடம் பணம் இருக்கிறது - இத்தொடர்களில் வரும் முதல்வினையைத் தேர்வு செய்து எழுதுக.

(அ) புத்தகம்,மேசை (ஆ) என்னிடம் (இ) இரு (ஈ) மேசை

நான் மதுரைக்குப் போயிருக்கிறேன்.

50. அப்பா வந்திருக்கிறார் - இத்தொடர்களில் வரும் துணைவினை எது?

(அ) அப்பா (ஆ) மதுரை (இ) கு (ஈ) இரு

51. வைத்தான் இச்சொல்லில் வரும் முதல் வினை என்ன?

(அ) வைத்தான் (ஆ) த் (இ) தான் (ஈ) வை

52. நீ என்னை அழ வைக்காதே - இத்தொடரில் வரும் முதல் உறுப்பையும், துணை வினையையும் எழுதுக.

(அ) நீ, வைக்காதே (ஆ) அழ, வை (இ) நீ, வை (ஈ) வை, நீ

53. அவன் வானொலியில் பாட்டு வைத்தான் - இத்தொடரில் வரும் வினைச்சொல்லைத் தேர்வு செய்து அதில் வரும் வினையடியை எழுதுக.

(அ) அவன், அவ (ஆ) வைத்தான், வை (இ) பாட்டு, பா (ஈ) வானொலி, வா

54. அவர் ஒருவரை பாட வைத்தார் - இதில் வரும் முதல் உறுப்பைத் தேர்வு செய்து எழுதுக.

(அ) அவர் (ஆ) அவ (இ) பாட (ஈ) வை

55. பானை நான்கு படி அரிசி கொள்ளும் - இதில் வினைச்சொல்லில் வரும் ஒட்டுகளை எழுதுக.

(அ) பானை (ஆ) கொள்+ ளும் (இ) ளும் (ஈ) படி

56. நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை - இத்தொடரில் முதல் வினை என்ன?

(அ) நான் (ஆ) சொன்னதை (இ) நீ (ஈ) கொள்

57. நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான் - இத்தொடரில் வரும் துணைவினை என்ன?

(அ) அவன் (ஆ) கேட்டு (இ) கொள் (ஈ) கொள்வான்

58. நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன் - இதில் கொள்கிறேன் என்னும் சொல்லில் வரும் துணைவினை என்ன?

(அ) பார்த்து (ஆ) கொள்கிறேன் (இ) கொள்ளும் (ஈ) கொள்